T1-பயிர்ப்பெருக்கமும் வேலாண்மையும் மற்றும் வளரிளம் பருவத்தை அடைதல்

மாதிரி வினாத்தாள் I

8th Standard

அறிவியல்

Reg.No. : | | | | | |

# I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

Time : 01:30:00 Hrs — Total Marks : 35

## பகுதி - அ

4 x 1 = 4

1) ________மூலம் விதைத்தல் பெருமளவில் நடைபெறுகிறது

(a) தூவுதல் (b) விதைத் தூவி எந்திரம்

2) வீடுகளில் இயற்கையான முறையில் ________ பயன்படுத்தி பூச்சிகளைத் தடுக்கலாம்.

(a) துளசி இலை (b) வேப்ப இலை

3) தமிழக அரசு ________ என்னும் அமைப்பை உருவாக்கிக் குறுநில விவசாயிகள், நுகர்வோரின் தேவையை நிறைவேற்றி வருகிறது.

(a) உழவர் சந்தை (b) கூட்டுறவு அங்காடி

4) இது ஒரு பதப்படுத்தப்பட்ட உணவு

(a) திராட்சை ரசம் (b) பால் (c) பழரசம்

## பகுதி - ஆ

1 x 1 = 1

5) பின்வருவனவற்றை வரிசைப்படுத்தி எழுதுக.

நிலத்தைத் தயார் செய்வதில் பின்வரும் படிகளை வரிசைப்படுத்துக.

அ. விதைத்தல்

ஆ. சமன்படுத்துதல்

இ. உழுதல்

## பகுதி - இ

10 x 3 = 30

6) பின்வரும் படங்களைப் பார்த்து பாசன வகைகளைக் குறிப்பிடுக.






அ)____________________ ஆ)____________________ இ)____________________ ஈ)____________________

7) கொடுக்கப்பட்டுள்ள வேதிப்பொருள்களை அதன் பலன்களின் அடிப்படையில் வகைப்படுத்துக.

பாஸ்பரஸ், 2- 4-D, டாலபேன், பொட்டாசியம், நைட்ரேட், மெட்டாகுளோர்.

| உரம் | களைக்கொல்லி |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 2. | 3. |

8) கொடுக்கப்பட்டுள்ள வேதிப்பொருள்களை அதன் பலன்களின் அடிப்படையில் வகைப்படுத்துக



மதன் தொடர்ந்து நெல்பயிரை மட்டுமே பயிரிட்டுக் குறைந்த விளைச்சலை ஈட்டுகிறார். நாதன் ஒவ்வொரு காலத்திற்கேற்ப பயிர்களை மாற்றி பயிரிட்டு சிறந்த விளைச்சலை ஈட்டுகிறார். மேற்கண்ட கூற்றுகளிலிருந்து சிறந்த முறை வேளாண்மைச் செயல்முறையைக் கண்டுபிடித்து நிறுவுக.

9) பின்வரும் பொருள்களைச் சேமிக்கும் முறையின் அடிப்படையில் வகைப்படுத்துக.

(ஆப்பிள், கோதுமை, உருளைக்கிழங்கு, அரிசி, திராட்சை, சோளம்)

| உலர் சேமிப்பு | குளிர் சேமிப்பு |
|---|---|
| | |
| | |
| | |

10) பொதுவாகக் காணப்படும் தாவரங்களை எழுதிப் நிறைவு செய்க

| பொதுவாகக் காணப்படும் தாவரங்கள் | | | |
|---|---|---|---|
| வ.எண் | பயிர் வகை | பயிர்கள் |  |
| 1. | தானியங்கள் | கோதுமை,______ | |
| 2. | பயறு வகைகள் | பட்டாணி,_______ |  |
| 3. | காய்கறிகள் | உருளைக்கிழங்கு,______ |  |
| 4. | கனிகள் | ஆப்பிள்,_________ |  |
| 5. | எண்ணெய் வித்துக்கள் | தென்னை,_________ |  |
| 6. | சர்க்கரை தரும் பயிர்கள் | கரும்பு,_________ |  |

11) குழந்தைப்பருவத்தில் தைராய்டு குறைபாடால் வரும் நோயின் பெயர் ‘கிரிடினிசம்’ ஆகும். இது குழந்தையின் உடல் வளர்ச்சியைப் பாதிக்கும். இவற்றைத் தவிர மற்றொரு குறைபாட்டையும் எழுதவும்.

12) கீழ்க்கண்டவற்றிற்குச் சரியான காரணங்களைக் கூறுக.

1. சிகரெட் புகைப்பதால் இரத்தம் உறைதல் நடைபெற வாய்ப்பு உள்ளது.
2. புகைப்பதால் ஆஸ்துமா தீவிரமாகும்
3. முளைகட்டிய பயறு வகைகள் உடலுக்கு நல்லது.
4. புற்றுச் செல்கள் மிக வேகமாகப் பிரிகின்றன.

13) பிட்யூட்டரி, தைராய்டு, அட்ரினல், கணையம், விந்துச்சுரப்பி, அண்டச்சுரப்பி. மேற்கண்ட சுரப்பிகளில் எது நாளமுள்ள, நாளமில்லாச் சுரப்பி தன்மை உள்ளது?

14) விந்தணுவில் தலை, நடுப்பகுதி, வால் போன்ற பாகங்கள் உள்ளன. இவற்றில் வால் பகுதியின் உபயோகத்தை எழுதுக.

15) பாபுவின் அம்மாவும், அத்தையும் அவர்களின் உறவுக்காரப் பெண்ணிற்குப் பிறக்கப்போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்று பேசிக் கொண்டிருந்தனர்.

1. அவர்களால் ஒரு குழந்தையின் பால் நிர்ணயம் செய்ய இயலுமா?
2. ஒரு கருமுட்டை ஆண் அல்லது பெண் என நிர்ணயிக்கும் காரணி எது?

*****************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in